DEPOSITION OF WITNESS

**In the Court of the Principal District Judge, Tiruchirappalli.**

**Sessions Case No. 86 / 2026**

Prosecution Witness No. PW.1

Chapter XXIII Code of Criminal Procedure

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name / பெயர் | : | **ரமேஷ்குமார்** | Caste / இனம் | : | |
| Father's/ Husband's Name தகப்பனார்/ கணவர் பெயர் | : | | Calling / வேலை | : | |
| Village / கிராமம் | : | | Religion / மதம் | : | |
| Taluk / வட்டம் | : | | Age / வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 06.08.2026.

(Accused Produced.)

**முதல் விசாரணை** :

நான் தற்போது சொரத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் லாரி டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். வழக்கில் இறந்துபோனவர் எனது அப்பா. இந்த வழக்கின் எதிரி கணபதி, திருமணமாகி குழந்தையுடன் இருந்த ஒரு பெண்ணை அழைத்து வந்து, எங்கள் ஊரான சொரத்தூரில் வைத்து குடும்பம் நடத்தி வந்தார். குழந்தையுடன் இருந்த பெண்ணை ஏன் அழைத்து வந்தாய் என்று என் தகப்பனார் மகாலிங்கம் மற்றும் ஊர் பெரியவர்கள் அவரிடம் கேட்டார்கள். அதனால் எதிரிக்கு, என் அப்பா மீது கோபம், இது குறித்து இருவருக்கும் அவ்வப்போது தகராறு நடந்தது. கடந்த 10.09.2025 ம் தேதி நான்

வேலைக்கு சென்றிருந்தேன். அப்போது எதிரிக்கும், என் தகப்பனாருக்கும் தகராறு ஏற்பட்டு, என் தகப்பனாரை எதிரி உருட்டு கட்டையால் தலையில் தாக்கி, அவருக்கு காயம் ஏற்பட்டதால் அவரை திருச்சி அரசு மருத்துவமனையில் என் மனைவியும், என் அத்தை பொன்னம்மாளும் சிகிச்சைக்காக சேர்த்துள்ளதாக தகவல் கிடைத்து நான் வந்து பார்த்தேன். மறுநாள் அதிகாலை 3.00 மணிக்கு என் தகப்பனார் சிகிச்சை பலனளிக்காமல் இறந்துவிட்டார். அதன்பிறகு நான் துறையூர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படுவதுதான் நான் கொடுத்த புகார். அது **அ.சா.ஆ.1.**, போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

இந்த சம்பவத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்பாக நான் லாரி ஓட்டுவதற்கு சென்றேன். என் தகப்பனாருக்கு குடிக்கும் பழக்கம் உண்டு. மேற்சொன்ன விவரங்கள் அனைத்தும் எனக்கு பொன்னம்மாள் மற்றும் சுகன்யா சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். என் வீடு, என் அத்தை வீட்டிலிருந்து தள்ளி உள்ளது என்றால் சரிதான், 100 மீட்டர் தள்ளி உள்ளது. மேற்சொன்ன பொன்னம்மாள், சுகன்யா மற்றும் என் மனைவி ஆகியோர் 100 நாள் வேலைக்கு செல்வார்கள் என்றால் சரிதான். அன்றைய தினம் அவர்கள் வேலைக்கு போகவில்லை. புகாரை பாண்டியன் என்பவர் எழுதினார், அவர் எனது உறவினர். புகாரை நான் காவல்நிலையத்தில் கொடுக்கும்போது அதிகாலை 4.00 அல்லது 4.20 மணி இருக்கும். சம்பவத்தன்று நான் மருத்துவமனைக்கு மாலை 7.30 மணிக்கு வந்தேன். நான் வந்துபார்த்தபோது என் தகப்பனார் பேசும்நிலையில்

இல்லை. நான் மருத்துவமனைக்கு வந்தபோது போலீசார் அங்கு இருந்தார்களா என்றால் இல்லை. என் அப்பா இறந்த தகவலை நான்தான் சொன்னேன். பொன்னம்மாள் ஏற்கனவே புகார் கொடுத்துவிட்டார் என்றாலும், அதற்காக எழுதி வாங்குவதற்காக போலீசார் என்னை காவல்நிலையத்திற்கு அழைத்து புகாரை வாங்கிக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும், என் அப்பாவிற்கும் உள்ள பிரச்சனை இந்த சம்பவத்திற்கு முன்பு வரை எனக்கு தெரியாது.

**மறு விசாரணை :**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

CHRISTOPHER M

Digitally signed by CHRISTOPHER M
Date: 2026.08.06 17:05:56 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

DEPOSITION OF WITNESS

**In the Court of the Principal District Judge, Tiruchirappalli.**

**Sessions Case No. 86 / 2026**

Prosecution Witness No. PW.2

Chapter XXIII Code of Criminal Procedure

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name / பெயர் | : | **சுகன்யா** | Caste / இனம் | : | |
| Father's/ Husband's Name தகப்பனார்/ கணவர் பெயர் | : | | Calling / வேலை | : | |
| Village / கிராமம் | : | | Religion / மதம் | : | |
| Taluk / வட்டம் | : | | Age / வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 06.08.2026.

(Accused Produced.)

**முதல் விசாரணை** :

நான் சொரத்தூரில் வசித்து வருகிறேன். நான் 100 நாள் வேலைக்கு செல்வேன், இல்லையென்றால் வீட்டில்தான் இருப்பேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும், அவர் பெயர் கணபதி. இந்த வழக்கில் இறந்துபோன மகாலிங்கம் எனக்கு உறவினர், அவர் என் மாமியாரின் தம்பி, சித்தப்பா முறை வேண்டும். 2025 ம் ஆண்டு செப்டம்பர் 10 ம் தேதி ஆஜர் எதிரிக்கும், மகாலிங்கத்திற்கும் என் வீட்டிற்கு எதிரே தகராறு நடந்து கொண்டிருந்தது, நான் சத்தம் கேட்டு வெளியே வந்தேன். நான் அவர்களிடம் சென்று எதற்காக தகராறு செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று வீட்டிற்கு போங்கள் என்று சொல்லிவிட்டு நான் வீட்டிற்கு

வந்தேன், எனக்கு பின்னாலேயே மகாலிங்கம் என் வீட்டிற்கு வந்தார். அவருக்கு பின்னால் வேகமாக வந்த எதிரி குவா கட்டையால் தலையில் ஒரு அடியும், முதுகில் 4 அடியும் அடித்துவிட்டார், அதனால் மகாலிங்கம் மயக்கமாகி கீழே விழுந்துவிட்டார். நான், வீட்டிலிருந்த என் கணவரை அழைத்தேன், பக்கத்து வீட்டிலிருந்த திவ்யா என்பவரை அழைத்தேன், பின்னர் ஆம்புலன்சுக்கு போன் செய்து துறையூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். எதிரிக்கும், மகாலிங்கத்திற்கும், எதிரி ஏற்கனவே திருமணமாகி குழந்தையுடன் இருந்த ஒரு பெண்ணை ஊருக்கு அழைத்து வந்து, அங்கேயே குடும்பம் நடத்தியதால் தகராறு நடந்தது. மகாலிங்கத்துடன் மருத்துவமனைக்கு என் மாமியாரும், இன்னொரு மருமகள் கவிதாவும் சென்றார்கள். என்னிடம் காட்டும் கட்டையால் எதிரி, அன்றைய தினம் மகாலிங்கத்தை அடித்தார். அந்த கட்டையை நாங்கள் தான் வெட்டி வந்து போட்டு வைப்போம். அந்த கட்டை **சா.பொ.1.**, மகாலிங்கம் மறுநாள் காலையில் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். மறுநாள் காலையில் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

நான் அடையாளம் காட்டிய கட்டை எங்கள் வீட்டின் முன்பு நாங்கள் போட்டு வைத்தது என்று சொன்னால் சரிதான். நான் கட்டையால் அடித்ததாக தான் போலீசாரிடம் சொன்னேன் என்றால் சரிதான். என் வீட்டிற்கு முன்பாக உளுந்து உடைக்கும் கல் உள்ளது. என் வீட்டிற்கும், அருகிலுள்ள கலியன் வீட்டிற்கும் இடையே சந்து உள்ளது என்றால் சரிதான். அந்த சந்தை ஒட்டி அரளை வைத்துள்ளோம் என்றால் சரிதான். தகராறு என் வீட்டிற்கு எதிர்த்தால்போல் ரோட்டை தாட்டி அந்தபுறம்

நடந்தது என்றால் சரிதான். அங்கு புங்கமரம் உள்ளது என்றாலும், ஊர்க்காரர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். தகராறு பற்றி அந்த ஊர்க்காரர்களுக்கு தெரியும், ஆனால் அடிக்கும்போது நான்மட்டும் தான் இருந்தேன், ஊர்க்காரர்கள் இல்லை. நான் சத்தம் கேட்டு வீட்டைவிட்டு வெளியே வந்து பார்த்தபோது மகாலிங்கம் விழுந்து கிடந்தார் என்றால் சரியல்ல. நான் அவர்களிடம் போய் ஏன் தகராறு செய்கிறீர்கள் வீட்டிற்கு போங்கள் என்று சொல்லி, மகாலிங்கத்தை என் வீட்டிற்கு போக சொன்னேன். தகராறு நடந்தபோது மகாலிங்கம் போதையில் இருந்தார் என்றால் சரிதான். எதிரியும் போதையில் இருந்தார். மகாலிங்கம் எதிரியை அடிக்க ஓடினார் என்றாலும், எதிரி தப்பித்து ஓடிவிட்டார் என்றாலும், அப்போது போதையில் மகாலிங்கம் வீட்டிலிருந்து வெளியே வந்தபோது படிக்கட்டில் தவறி உரலில் விழுந்து காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அவர் இறந்ததற்கு ஒரு காரணம் கற்பிக்கவேண்டும் என்பதற்காக எதிரிதான் கட்டையால் தாக்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தகராறு நடந்தபோது என் கணவர் வீட்டில்தான் இருந்தார் என்றால் சரிதான். என் வீட்டிற்கு முன்புறமும், பின்புறமும் வீடு உள்ளது என்றால் சரிதான். நாங்கள் பின்புறமுள்ள வீட்டில்தான் படுத்துக் கொள்வோம் என்றால் சரிதான். அடிப்பட்ட பிறகுதான் நானும், என் கணவரும் பின்வீட்டிலிருந்து வந்து பார்த்தோம் என்று சொன்னால் சரியல்ல. கவிதாவுக்கு நான்தான் போன் செய்தேன் என்றால் நான் நேரில் சென்று அழைத்து வந்தேன், அவர் வீடு, 8 வீடு தள்ளி உள்ளது. சம்பவ சமயத்தில் நான் அங்கில்லை என்பதால்தான் நான் மருத்துவமனைக்கு

செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை :**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

CHRISTOPHER M

Digitally signed by CHRISTOPHER M
Date: 2026.08.06 17:06:04 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.